# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM

## SUMMATIVE ASSESSMENT –I (2015 -16)

## TAMIL - CLASS –VII

### தமிழ் - ஏழாம் வகுப்பு

Time :- 3 Hours | Maximum Marks :- 90

நேரம் :- 3 மணி | மதிப்பெண்கள் :- 90

---

## பிரிவு–அ

**அ.கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.** 5 x 2 = 10

'விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே

பசும்புல் தலைகாண் பரிது'

என்றார் வள்ளுவர். மழை இன்றேல் பசும்புல் கூட இருக்காது. அத்தகைய மழைநீர் மனிதன் உயிர்வாழ மூலக்காரணமாக உள்ளது. பெய்கின்ற மழைநீரானது கால்வாய்கள் மற்றும் ஆறுகளின் மூலமாகச் சென்று கடலில் வீணாகக் கலந்து விடுகின்றன. அப்படி வீணாகாமல் மழைநீரை குளத்தில் தேக்கி சேமிக்கலாம் , கிணறுகளில் தேக்கி சேமிக்கலாம் , அணைக்கட்டுகளிலும் , பெரிய ஏரிகளாக கட்டியும் சேமிக்கலாம் மற்றும் பூமிக்கடியிலும் சேமிக்கலாம். பூமிக்கடியில் சேமிக்கையில் மழைக்காலங்களில் மொட்டை மாடிகளிலும் , குடிசை வீடுகளின் மீதும் பெய்கின்ற மழைநீரை பிளாஸ்டிக் மற்றும் சிமெண்ட் குழாய்கள் மூலம் வடிய வைத்து பூமிக்குள் செலுத்தி சேமிக்கலாம். தொட்டியில் சிறு கற்கள் , மணல் போன்றவற்றை பரப்பி அதில் மழைநீரை சேகரித்து தேவையான போது பயன்படுத்தலாம். மழைநீரை சேமிப்பதால் நிலத்தடி நீர் உயர்கிறது. உப்புநீர் நன்னீராகவும் மாறுகிறது. தண்ணீருக்காக அரசாங்கத்தை நம்பியிருக்க வேண்டாம். அண்டை மாநிலங்களிடம் கையேந்தாமல் வாழலாம்.

வினாக்கள் :-

1.மழைநீர் எவற்றிலெல்லாம் சேமிக்கப்படுகிறது.?

2.மழைநீர் சேமிப்பால் வரும் நன்மைகள் யாவை ?

3.பூமிக்கடியில் மழைநீரை எவ்வாறு சேமிப்பாய் ?

4.மழைநீரினை குறித்து வள்ளுவரின் வாக்கு யாது ?

5.அ.மழைநீர் ___________ மற்றும் ____________ மூலமாகச் சென்று கடலினை அடைகிறது.

ஆ.மழை இன்றேல் பசும்புல் கூட இருக்காது. இதில் <u>இன்றேல்</u> என்பதன் பொருள் _________

(அ. இன்றைய தினம் ஆ. இல்லையெனில் இ. இப்பொழுது)

ஆ.விடுதியில் தங்கியிருக்கும் நீ , கல்விச் சுற்றுலா செல்ல அனுமதி வேண்டித் தந்தைக்குக் கடிதம் எழுதுக. 8

இ.கீழ்க்காணும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்குக் கட்டுரை எழுதுக. 10

1.நான் விரும்பும் கவிஞர்

2.தேசியக்கொடி

## பிரிவு-2

**இலக்கணம் :-** 15 x 1 = 15

**அ.பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.சேய்மைச்சுட்டு

அ.இவன் ஆ.அவர் இ.இதுவா? ஈ.எவனோ?

2.சுட்டுத்திரிபு

அ.இவ்வீடு ஆ.அப்பையன் இ.மனிதனோ? ஈ.அந்த வீடு

3.புறவினா

அ.அக்கோழி ஆ.யாவர்? இ.எம்மனிதன்? ஈ.எவர்?

**ஆ.தகுந்த விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

4.____________ சுட்டும் முறை தற்போது வழக்கில் இல்லை.

அ.ஏ ஆ.உ இ.ஆ ஈ.ஓ

5.சொல்லுக்கு உள்ளேயே நின்று வினாப் பொருளைக் காட்டுவது ______________

அ.அகச்சுட்டு ஆ.அகவினா இ.புறச்சுட்டு ஈ.புறவினா

6.சொல்லின் இறுதியில் வரும் வினா எழுத்துகள் ____________

அ.ஆ,ஏ,ஓ ஆ.எ,ஏ,யா இ.ஆ,ஏ,யா ஈ.ஆ,ஓ,யா

## இ.அடைப்புக்குள் கூறியவாறு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

7.குற்றாலம் (மாத்திரை கூறுக)

அ.ஆறு மாத்திரை ஆ.ஐந்து மாத்திரை

இ. ஏழு மாத்திரை ஈ. ஐந்தரை மாத்திரை

8.மயில் (அண்மைச்சுட்டு ஆக்குக)

அ.அம்மயில் ஆ.அந்த மயில் இ.எந்த மயில்? ஈ.இம்மயில்

9.நண்பனோ? (வினா எழுத்தை எடுத்து எழுதுக)

அ.னோ ஆ.ஓ இ.னா ஈ.ஆ

## ஈ.தகுந்த இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

10.அந்த யானை

அ.அகச்சுட்டு ஆ.புறச்சுட்டு இ.அண்மைச்சுட்டு ஈ.சுட்டுத்திரிபு

11.ஆறரை மாத்திரை

அ.பாரதிதாசன் ஆ.ஔவையார் இ.வள்ளுவர் ஈ.வள்ளலார்

12.நிலம் , நீர் , காற்று , நெருப்பு , ஆகாயம்

அ.இவகை நிலங்கள் ஆ.ஐம்பொறி

இ.ஐம்பூதங்கள் ஈ.ஐம்பெருங்காப்பியங்கள்

## உ.சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

13.அ.மெய்யெழுத்துகள் பெறும் மாத்திரைகள் -அரை மாத்திரை

ஆ.மெய்யெழுத்துகள் பெறும் மாத்திரைகள் - கால் மாத்திரை

இ.மெய்யெழுத்துகள் பெறும் மாத்திரைகள் - ஒரு மாத்திரை

ஈ.மெய்யெழுத்துகள் பெறும் மாத்திரைகள் - இரண்டு மாத்திரைகள்

14.அ.அச்சம் , நாணம் , மடம் , பயிர்ப்பு - நாற்படை

ஆ. அச்சம் , நாணம் , மடம் , பயிர்ப்பு -நாற்குணம்

இ. அச்சம் , நாணம் , மடம் , பயிர்ப்பு - நானிலம்

ஈ. அச்சம் , நாணம் , மடம் , பயிர்ப்பு - நால்வகை விளையாட்டு

15.அ. அ,இ,உ என்பன சுட்டு எழுத்துகள்

ஆ. எ,ஏ,யா என்பன சுட்டு எழுத்துகள்

இ. ஆ,ஏ,யா என்பன சுட்டு எழுத்துகள்

ஈ. ஒ,ஓ,ஔ என்பன சுட்டு எழுத்துகள்

## பிரிவு -3

**அ.பொருள் கூறுக. (மூன்று மட்டும்)** 3

1.ஒழுக்கு 2.பாழ்படுதல் 3.தரணி 4.நெடிதுயர்ந்த

**ஆ.எதிர்ச்சொல் எழுதுக.(மூன்று மட்டும்)** 3

1.அரிது 2.பெருமை 3.முகந்திரிந்து 4.நிறைந்த

**இ.பிரித்து எழுதுக.** 3

1.நீரோடை 2.கருங்கல் 3.வாயினராதல்

**ஈ.கோடிட்ட இடத்தை நிரப்புக.** 2

1.வண்டுகள் ____________________ எழுப்பும்.

2.முகர்ந்துப் பார்த்தாலே வாடும் மலர் ______________________

**உ.பிழை நீக்கி எழுதுக.** 2

அதிகாளையில் கோலி கூவும். கதிரவன் உதயமாகும்பொலுது நாம் கன் விலிக்க வேண்டும். இதுவே சிரந்த பளக்கமாகும்.

**ஊ. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 2

1. நல்லனவற்றைக் கேட்பதால் கிடைப்பது ______________

அ. கயமை ஆ. பெருமை இ. சிறுமை

2. யானையைக் குறிக்கும் சொல் ______________

அ. கரி ஆ. பரி இ. மந்தி

**எ. வேறுபாடு எழுதுக.** 2

1. வால் - வாள் -

2. வேலை - வேளை -

## பிரிவு -4

**அ. கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பகுதியைப் படித்துக் கேட்கப்பட்டுள்ள பல்விடை வினாக்களுக்கு விடையளி :-**

மீண்டும் விண்ணில் பறந்தேன். கீழே பார்த்தேன். ஆறு ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் அது சாக்கடையாகக் காட்சியளித்தது. தொழிற்சாலைகளின் வேதிக்கழிவுகள் , சாயப்பட்டறைகளின் கழிவுகள் போன்றவை ஆற்றில் கலந்து கொண்டிருந்தன. இந்த நீரை மனிதர்கள் குடித்தால் சிறுநீரகக் கோளாறுகள் , மஞ்சள் காமாலை , காய்ச்சல் , வாந்தி , பேதி முதலிய பல நோய்கள் ஏற்படுகிறது.

**வினாக்கள் :-** 5

1. வேதிக்கழிவுகள் கலந்த ஆற்று நீரைக் குடிப்பதால் ஏற்படும் நோய் ______________

அ. மாரடைப்பு ஆ. மஞ்சள் காமாலை இ. இரத்த கொதிப்பு

2. சாயப்பட்டறை என்பதன் பொருள் ______________

அ. கழிவுப்பொருள் ஆ. நச்சுப்பொருள் இ. வண்ணமேற்றும் தொழிற்சாலை

3. மங்கை கனவில் கண்ட ஆறு ______________ காட்சியளித்தது.

அ. சாக்கடையாக ஆ. சுத்தமாக இ. நீரின்றி

4. விண் என்பது இதனைக் குறிக்கும்.

அ. கடல் ஆ. நிலம் இ. வானம்

5. வாந்தி , பேதி போன்றவை இதனால் ஏற்படும்.

அ. தூய்மையற்ற நீரால் ஆ. தூய்மையற்ற காற்றால் இ. தூய்மையற்ற ஆடையால்

**<u>ஆ.ஏதேனும் நான்கனுக்கு மூன்று வரிகளில் விடையளி :-</u>** 8

1.துன்பத்தால் வருந்திக் கெடாதவர் யார் ?

2.நுட்பமாகக் கேட்டறியும் திறனால் பெறும் நன்மைகள் யாவை ?

3.தொழிற்சாலைகள் வெளியிடும் புகையால் ஏற்படும் பாதிப்புகள் யாவை ?

4.தஞ்சைக் கோவிலிலுள்ள நந்திச்சிலை பற்றி எழுதுக.

5.தஞ்சைக் கோவிலில் சிற்பங்களாக வடிக்கப்பட்ட உருவங்கள் யாவை ?

**<u>இ.பின்வருவனவற்றிற்கு ஆறு வரிகளில் விடையளி :-</u>** 6

1.மழை பெய்யாவிடில் ஒழுக்கம் கெடும் - எவ்வாறு ?

2.இராசராச வாயிலின் சிறப்பு யாது ?

**<u>ஈ.அடிமாறாமல் எழுதுக.</u>** 4

1.' நீரின்று' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

2.' விருந்து' என முடியும் குறளை எழுதுக.

அல்லது

'அரிது' என முடியும் குறளை எழுதுக.

உ.<u>' வெற்றியின் முதற்படி'</u> எனும் தலைப்பில் தலைப்பில் உள்ள <u>துணைப்பாடக் கட்டுரையை</u> எழுதுக. 7

*******************